திலே இருக்கின்றன. அதனால் நீங்கள் அஞ்சத் தேவையில்லை. அதிலே ஒரு பகுதி உங்களுக்கு ஒதுக்கீடு செய்து தருவோம் என்பதை கோடிட்டுக் காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 539, 540 மற்றும் 541 ஆகியவை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப் பெறுகின்றன.

வினா எண். 542, டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

542—

ஒகேனக்கல்லை நகரியமாக மாற்றும் திட்டம்.

*1054—டாக்டர் வெ. புருஷோத்தமன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பென்னாகரம் தொகுதி ஒகேனக்கல்லை நகரியமாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நகரியமாக மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. ஆண்டு முழுவதும் அருவியிலே நீராடக்கூடிய ஒரு சூழ்நிலை அங்கே காணப்பட்டு சிறந்த சுற்றுலாத் தலமாக அந்த மாவட்டத்திலே விளங்குகிறது. அந்தப் பகுதி முன்னேறவில்லை. ஆகவே, அதை சிறிய ஒரு நகரியமாக ஏற்படுத்தினால் அந்தப் பகுதி முன்னேறும். லட்சக் கணக்கான மக்கள் அங்கே வந்து செல்கிறார்கள். ஆகவே, இப்போது இல்லை என்றாலும் வருங்காலத்திலாவது இருக்குமா என விரும்புகிறேன்.

1992 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிராமத்தை நகரியமாக மாற்றுவதற்கு பல்வேறு அடிப்படை தேவைகளை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆண்டு வருமானத்தையும் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் தொகையையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய காரணத்தினாலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற ஊராட்சியிலே ஆண்டு வருமானம் 91 ஆயிரம் ரூபாய் என்பதும் அதனுடைய மக்கள் தொகை சுமார் 500 என்ற காரணத்தினாலே அதனை கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் தலமாக இருக்கிற காரணத்தாலே ஆண்டு வருமானம் அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. அங்கு வருவாய்த் துறை மூலமாக வருகிற நிதியினுடைய கணக்கைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அங்கு ஊராட்சி ஒன்றியம் மூலமாக வருகிற வருவாயை கணக்கிட்டு, அங்குள்ள மக்கள் தொகையை கணக்கில் எடுக்காமல் அங்கு வருகிற லட்சக் கணக்கான சுற்றுலா பயணிகளை கணக்கில் கொண்டு, வரும் ஆண்டிலாவது அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : அரசு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 486, திரு. சிங்கை கோவிந்தராசு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

486—

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு கவுன்சில் ஹால் கட்டுதல்.

*3732—திரு. சிங்கை கோவிந்தராசு :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு கவுன்சில் ஹால் புதியதாக கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

சட்டமன்றம் LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS